


புதுகை வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ ஜூன். 29, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 265 ❖ ரூ.10

## "இந்திய வளர்ச்சியில் இன்ஜினாக தமிழகம்" பிரதமர் பாராட்டை நினைவுகூர்ந்த முதல்வர்

# பெருமிதம்

## தலைமைச் செயலகமானது தமிழக மக்கள் ஒவ்வொருவரையும் முன்னேற்ற உழைக்கும் முதன்மைச் செயலகமாக மாறி உள்ளது முதல்வர் மு.க.ஸ்டாலின்.



▸ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி வாயிலாக நேற்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின்கீழ் செயல்படும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், புதுக்கோட்டை நகராட்சியில், புனரமைக்கப்பட்ட பூமாலை வணிக வளாகத்தினை திறந்து வைத்தார். புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, கலந்துகொண்டார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை, ஜூன். 29-

தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10-வது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முத்தான திட்டங்கள் தொடர்பான இரண்டாவது ஆய்வுக் கூட்டம்நேற்றுநடைபெற்றது.



இந்த ஆய்வுக் கூட்டத்தில், உயர்கல்வி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, நீர்வளம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, பொது மற்றும் மறுவாழ்வு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் தகவல் ஆகிய 13 துறைகளைச் சார்ந்த நடைமுறையில் உள்ள 55 திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும், 35 எதிர்கால திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "நமது அரசு செயல்படுத்தி வரும் முத்திரைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற அமைச்சர்களோடும், செயலாளர்களோடும், துறைத் தலைவர்களோடும் நான் ஆய்வினை மேற்கொண்டு வருகிறேன். அந்த வகையில், கடந்த 16-6-2023 அன்று 11 துறைகள் தொடர்பான திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றைக்கு 13 துறைகள் தொடர்பான திட்டங்கள் குறித்து ஆய்வினை நடத்தி முடித்திருக்கிறோம்.

தமிழகத்தின் எதிர்கால கட்டமைப்பு, வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அவற்றை நமது அரசு கண்ணும், கருத்துமாக செயல்படுத்தி வருகிறது. மாநில பொருளாதாரத்தின் ரத்த நாளங்களாக செயல்படுவதில் மூலதன முதலீடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அனைத்துத் துறையின் வளர்ச்சியினையும் கருத்தில் கொண்டு, அந்தந்த துறைகளின் தேவைக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டது. மனிதவள மேம்பாடு, மக்கள் நல்வாழ்வு, சமூக நீதி, வறுமை ஒழிப்பு, தொழில்வளர்ச்சி என பல்வேறு காரணிகளை மையமாக கொண்டு தமிழகத்தின் வளர்ச்சி இப்போது வடிவமைக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள், இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது. இவற்றையெல்லாம் கருத்திலேகொண்டுதான், இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் இன்ஜினாக உள்ளது என பிரதமர் நரேந்திர மோடி மனம் திறந்து பாராட்டியதைநான் இந்த நேரத்தில் நினைவுகூர விரும்புகிறேன்.

தமிழக அரசு, தொழிற்சாலைகளுக்காக உள்கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தி வருவதால், மேலும் தொழில் நிறுவனங்கள் இங்கு தொழில் தொடங்க ஆர்வம் காட்டி வருவதாகவும், தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் தொழில் முதலீடுகள் குவிந்த வண்ணம் உள்ளதாகவும் ஊடகங்களும், பத்திரிகைகளும் பாராட்டுகின்றன தலையங்கம் தீட்டுகின்றன. பாராட்டுக்கள் ஆனாலும், விமர்சனங்கள் ஆனாலும், அவற்றை மனதிலே நிறுத்தி, இலக்கை நோக்கி நாம் அனைவரும் வெற்றி நடை போட வேண்டும்.

தலைமைச் செயலகம் என்பது தமிழக மக்கள் ஒவ்வொருவரையும் முன்னேற்ற உழைக்கும் முதன்மைச் செயலகமாக மாறியிருக்கிறது.

எனவே, திட்டங்களைப் பொறுத்தவரையில், அவற்றை அறிவிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அந்த திட்டங்களை விரைந்து நிறைவேற்றி, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதிலும் நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டும். திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படும் காலதாமதம் திட்டச் செலவினத்தை அதிகப்படுத்தும்; மக்களுக்கு அது மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் உணர்ந்து, திட்டப் பணிகளை துரிதமாகவும், தரமாகவும் முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மையான மாநிலமாகவும், வளமான மாநிலமாகவும் உருவாக்கிட வேண்டும்; எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் போன்ற உயரிய இலட்சியத்தோடு வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் நமது அரசுக்கு, நீங்கள் உங்களது ஒத்துழைப்பினை என்றென்றும் நல்கிட வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



# இன்று

| | | | | |
|---|---|---|---|---|
| 29-6-2023 | அரசு விடுமுறை | கபமுகூர்த்தம் | சர்வ ஏகாதசி | பக்ரீத் பண்டிகை |

வெற்றிலை காம்பை வாயில் அதக்கினால் குமட்டல் நீங்கும்
சக வருடம் 1945 ஆஷாடம் 08

| சோபகிருது ஆனி 14 | JUN - THU வியாழன் | துல்ஹிஜ்ஜா 10 வளர்பிறை 180 / 185 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர்.ஏகாதசி 44.01 (மா.11.32) சுவாதி 19.38 (மா.01.47) தியாஜ் 33.40 அகஸ் 31.25 அமிர்த 19.38 மேல் சித்த. கோபத்ம விரதாரம்பம். கோவர்த்தன விரதம். சர்வ ஏகாதசி. கபமுகூர்த்தம். பக்ரீத் பண்டிகை. அரசு விடுமுறை. சொக்கலிங்கம்புதூர் நகர சிவாலயங்களில் வருஷாபிஷேகம்.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 10.45-11.45 | 12.30-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை : ---------- | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; மிதுன லக்கனம் இருப்பு நா. 3 வி. 03; சந்திராஷ்டமம் உத்திரட்டாதி ரேவதி
கரணம் : 3-4.30 சூரிய உதயம் : 5.56
கோபம் அன்பை அழிக்கும்

இராசிபலன்: மேஷம் - மறதி; ரிஷபம் - நலம்; மிதுனம் - வரவு; கடகம் - வெற்றி; சிம்மம் - பெருமை; கன்னி - கோபம்; துலாம் - லாபம்; விருச்சி - அன்பு; தனுசு - வரவு; மகரம் - எதிர்ப்பு; கும்பம் - தடங்கல்; மீனம் - தீரம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## "மாமன்னன் ஒரு எமோஷன்" இயக்குநர் மாரிசெல்வராஜை பாராட்டிய தனுஷ்



சென்னை, ஜூன். 29-
"மாமன்னன் திரைப்படம் ஒரு எமோஷன்" எனக் கூறி படத்தின் இயக்குநர் மாரிசெல்வராஜை நடிகர் தனுஷ் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "மாரிசெல்வராஜின் 'மாமன்னன்' ஒரு எமோஷன். மாரிசெல்வராஜை ஆரத் தழுவிக் கொள்கிறேன். வடிவேலு மற்றும் உதயநிதி ஸ்டாலின் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். ஃபஹத் பாசில் மற்றும் கீர்த்தி சுரேஷ் சிறப்பான பங்களிப்பை செலுத்தியுள்ளனர். இடைவேளைக்காட்சியின்போது திரையரங்குகள் அதிரப்போகின்றன. இறுதியாக ஏ.ஆர்.ரஹ்மான் பியூட்டிஃபுல்" எனப் பதிவிட்டுள்ளார்.

மாரிசெல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின், வடிவேலு நடித்துள்ள படம் 'மாமன்னன்'. ஃபஹத் பாசில், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். ரெட் ஜெயன்ட் நிறுவனம் படத்தை தயாரித்துள்ளது. தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## பெங்களூருவிலும் 1 கிலோ தக்காளியின் விலை ரூ.100–ஐ தொட்டது தமிழகத்திலும் விலை அதிகரிக்க வாய்ப்பு

**பெங்களூரு, ஜூன். 29- பெங்களூருவில் ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.100-ஐ தொட்டதால் பொதுமக்கள் வேதனை அடைந்துள்ளனர்.**

கர்நாடகாவில் வறட்சி நிலவுவதால் சில வாரங்களாக தக்காளி, பீன்ஸ், கேரட், இஞ்சி உள்ளிட்ட காய்கறிகளின் விலை தொடர்ந்து அதிகரித்தது. கடந்த ஒரு வாரமாக ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.50-க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தக்காளி அதிகமாக விளையும் கோலார் மாவட்டத்தில் திடீரென மழை பெய்தது. இதனால் தக்காளி சேதமடைந்து, அழுகும் நிலை ஏற்பட்டது.

இதனால் பெங்களூருவில் உள்ள கே.ஆர்.மார்க்கெட், யஷ்வந்த்புரம் மார்க்கெட், கிருஷ்ணராஜபுரம் மார்க்கெட் ஆகியவற்றுக்கு தக்காளி வரத்து வெகுவாகக் குறைந்தது. எனவே தக்காளிக்கு கடும் தட்டுப்பாட்டு ஏற்பட்டதால் சில்லறை சந்தையில் ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.70-ல் இருந்து அதிகரித்து நேற்று ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதேபோல பீன்ஸ் 1 கிலோ ரூ.120-க்கும், இஞ்சி 1 கிலோ விலை ரூ.220-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கர்நாடகாவில் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளதால் தமிழகத்துக்கு காய்கறிகளை ஏற்றிச் செல்லும் லாரிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இதனால் தமிழகத்தில் தக்காளி, பீன்ஸ், இஞ்சி, கேரட் உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## "பெரும்பான்மை அரசால் பொது சிவில் சட்டத்தை மக்கள் மீது திணிக்க முடியாது" ப.சிதம்பரம்



**புதுடெல்லி, ஜூன். 29- "கொள்கையால் வழிநடத்தப்படும் பெரும்பான்மை அரசு, பொது சிவில் சட்டத்தை மக்கள் மீது திணிக்க முடியாது. அது மக்களிடம் பிரிவினையை அதிகப்படுத்தும்" என்று காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் கருத்து தெரிவித்துள்ளார். பொது சிவில் சட்டம் குறித்து பிரதமர் மோடி வலியுறுத்திய நிலையில், ப.சிதம்பரம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தனதுட்விட்டர்பக்கத்தில் நீண்ட பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில் அவர், "பொது சிவில் சட்டத்தை வலியுறுத்திப் பேசும்போது பிரதமர் மோடி நாட்டை ஒரு குடும்பத்துடன் ஒப்பிட்டு பேசியிருக்கிறார். மேலோட்டமாக பார்க்கும்போது இந்த ஒப்பீடு சரியாகவேத் தோன்றும். ஆனால், யதார்த்தம் வித்தியாசமானது.

குடும்பம் என்பது ரத்த உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளது. ஒரு தேசம் அரசியல் ஆவணமான அரசியலமைப்புச் சட்டத்தால் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்துக்குள்ளும் வேற்றுமைகள் உண்டு. நமது அரசியலமைப்பு நாட்டு மக்களுக்கிடையே உள்ள வேற்றுமை மற்றும் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறது.

பொது சிவில் சட்டம் என்பது ஓர் ஆசை. கொள்கையால் இயக்கப்படும் ஒரு பெரும்பான்மை அரசு அதனை மக்கள் மீது திணிக்க முடியாது. பொது சிவில் சட்டத்தை ஒரு பயிற்சி என்று பிரதமர் கூறுகிறார். அவர், தற்போது பொது சிவில் சட்டம் என்பது சாத்தியமில்லை என்ற கடைசி சட்ட ஆணையத்தின் அறிக்கையை வாசிக்க வேண்டும்.

பாஜகவின் சொல்லாலும் செயலாலும் நாடு பிளவுபட்டுள்ளது. பொது சிவில் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும்போது, அந்தப் பிரிவு மேலும் அதிகாமாகும். நாட்டில் நிலவும் பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை, வெறுப்புக் குற்றங்கள்,பாகுபாடு காட்டுதல் மற்றும் மாநிலங்களின் அதிகாரங்களை பறித்தல் போன்றவற்றில் இருந்து நாட்டின் கவனத்தை திசைதிருப்புவதற்காகவே பிரதமர் பொது சிவில் சட்டத்தினை வலியுறுத்தி வருகிறார். மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

நல்லாட்சி தருவதில் தோல்வியடைந்துவிட்ட பாஜக, வாக்காளர்களை துண்டாடவும், அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவுமே பொது சிவில் சட்டத்தினை தற்போது கையில் எடுத்துள்ளது" என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

**கனம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நீதிபதி அவர்கள்**
**புதுக்கோட்டை ந.க.எண்: 0768/2023/அ6**

சி.ரவிச்சந்திரன்,
த/பெ. சின்னையா
436. வதங்கன்தெரு, அனவயல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், ஆலங்குடி.
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் **சி.ரவிச்சந்திரன்,** தனது தந்தை சின்னையா என்பவர் கடந்த 24.06.2008-ம் தேதியன்று வீட்டு எண்: 436. வதங்கன்தெரு, அனவயல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை அறியவும்.

**சி.ரவிச்சந்திரன்,**
**மனுதாரர், 436. வதங்கன்தெரு, அனவயல், ஆலங்குடி தாலுகா.**






▶ புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றுவதற்காக உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல் குழு கள அலுவலர்களுக்கான கூட்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆர்.எஸ். குமாரவேலன் தலைமையில், வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), ஊராட்சி ஆர். ரவிச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உதவி பொறியாளர்கள் கே.சுமதி, மு.கண்ணகி, புதுக்கோட்டை வருவாய் ஆய்வாளர் ச.பரணிதரன், புதுக்கோட்டை வனஅலுவலர் கா. மகேந்திரன் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அ.கு. சுந்தரவடிவு மற்றும் த. மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ தென்காசியில் காந்தி-கலாம் சிறப்பு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் அமெரிக்க நண்பர் மருத்துவர் விஜி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தென்காசியை சார்ந்த சாஸ்தா கணபதி சுப்ரமணியனுக்கு காந்தி கலாம் சிறப்பு விருதினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் விவேகானந்தன், சமூக நல ஆர்வலர் திருமாறன், விஜயராகவன், ராமோகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ புதுச்சேரியில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள காமாட்சியம்மன் கோவில் சொத்தை அபகரித்துள்ளதாக பாஜக சட்டமன்ற உறுப்பினர் ஜான்குமாரை கைது செய்யக்கோரி, சமூக அமைப்பினர்,பல்வேறு கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



▶ புதுச்சேரி மாநில குடிமை பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஏ.கே.சாய் ஜெ. சரவணன் குமார் நேற்று காலை காரைக்கால் மதகடியில் அமைந்துள்ள குடிமை பொருள் வழங்கல் துறை அலுவலகத்தில் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டார். முதலில் வருகை பதிவேட்டை பார்வையிட்ட அமைச்சர் அதிகாரிகள் முதல் அலுவலக ஊழியர்கள் வரை அனைவரும் சரியான நேரத்தில் பணிக்கு வரவேண்டும் என்றும் இனி காலதாமதத்துடன் வந்தால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும். அலுவலகத்தில் பொதுமக்களை காத்திருக்க வைக்காமல் அவர்களுடைய குறைகளை உடனுக்குடன் காலம் தாழ்த்தாமல் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் பொதுமக்களிடமிருந்து எனக்கு எந்தவித குறைகளும் வராத வண்ணம் ஊழியர்கள் பணி செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## செந்துறை பகுதியில் கால்நடை மருத்துவ முகாம் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்பு



அரியலூர், ஜூன். 29-
அரியலூர் மாவட்டம், செந்துறை பகுதியில் நடைபெற்ற, கால்நடை மருத்துவ முகாம், பால் உற்பத்தி கருத்தரங்கு மற்றும் 11.44 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி பணிகள் தொடக்க விழாவில், போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் பங்கேற்றார்.


முன்னாள் முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற, இம்முகாமில் கூட்டுறவுத்துறையின் சார்பில், கால்நடை பராமரிப்பு கடன் 21 நபர்களுக்கு ரூ.31.50 இலட்சம் மதிப்பீட்டிலும், பயிர் கடன் 124 நபர்களுக்கு ரூ.94.58 இலட்சம் மதிப்பீட்டிலும், மகளிர் சுய உதவிக் குழு கடன் 5 குழுக்களுக்கு (72 நபர்கள்) ரூ.33.12 இலட்சம் மதிப்பீட்டிலும் என, மொத்தம் 217 நபர்களுக்கு, ரூ.1.31கோடி மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளும், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் ஆவின் சார்பில் சிறந்த பால் உற்பத்தியாளர்கள், சிறந்த பால் கொள்முதல் பணியாளர்கள், இலவச தீவன பயிர் விதைகள் உள்ளிட்ட 79 நபர்களுக்கு, ரூ.24 லட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகள் என, மொத்தம் 296 நபர்களுக்கு, ரூ.1.55 கோடி மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை வழங்கியும், கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை தொடங்கி வைத்தும் தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் பேசினார்.

இவ்விழாக்களில், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் முருகண்ணன் கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் சுரேஷ் கிறிஸ்டோபர், கூட்டுறவுத்துறை மண்டல இணை பதிவாளர் தீபாசங்கரி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், துணை பதிவாளர் (பால்வளம்) நாகராஜ் சிவக்குமார், துணை பொது மேலாளர் (ஆவின்) கணேசா, உதவி பொது மேலாளர் முனுசாமி, செந்துறை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க செலாளர் கொளஞ்சிநாதன்,

கோட்டப் பொறியாளர்( நபார்டு மற்றும் கிராம சாலைகள் திருச்சி) பெ.வடிவேல்,உதவிக்கோட்டப் பொறியாளர் அரியலூர் வி.பி. சரவணன்,உதவி பொறியாளர் எஸ். பிரியதர்ஷினி, வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன், திமுக செந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர் எழில் மாறன், தெற்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், குழுமூர் சுமதி கருணாநிதி, செங்கமேடு புலேந்திரன், இலங்கைச்சேரி சிவ பாஸ்கர் மற்றும் அரசு அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கர்நாடக அணைகளில் நீர்மட்டம் குறைந்ததால்

## குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தமிழகத்துக்கு காவிரி நீர் கிடைப்பதிலும் சிக்கல்



கர்நாடகா, ஜூன். 29-
கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை பொழியாததால் அம்மாநிலத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் அங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

கர்நாடகாவில் பெரும்பாலும் ஆண்டுதோறும் மே மாத இறுதி வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும். இந்த ஆண்டு மே மாதத்தில் கோடை மழையும், ஜூன் மாதத்தில் தென்மேற்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவுக்கு பொழியவில்லை.

தென்மேற்கு பருவமழை ஒரு மாதத்துக்கும் மேலாக தாமதமாகியுள்ளதால் பெரும்பாலான இடங்களில் வறட்சி நிலவுகிறது.இதனால் ஆறுகளில் இருந்து நீர்வரத்து முற்றிலுமாக குறைறைந்துள்ளதால் அணைகள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

குடகு, மைசூரு உள்ளிட்ட காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைப்பொழிவு முற்றிலுமாக குறைந்துள்ளதால் காவிரி ஆற்றுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் மண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கபட்டணாவில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. செவ்வாய் மாலை 7 மணி நிலவரப்படி, 124.80 அடி உயரமுள்ள கிருஷ்ணராஜசாகர் அணையின் நீர்மட்டம் 77.48 அடியாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் நீர்மட்டம் 106 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

காவிரிநீர்ப்பிடிப்புபகுதியில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையில் மட்டுமல்லாமல் கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளிலும் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் கிருஷ்ணராஜசாகர் அணையில் 28.59 டிஎம்சி நீர் இருந்த நிலையில், இந்த ஆண்டு 9.86 டிஎம்சி மட்டுமே உள்ளது.

கபினி அணையில் கடந்த ஆண்டு இதே நாளில் 8.26 டிஎம்சி நீர் இருப்பு இருந்த நிலையில் இந்த ஆண்டு 4.27 டிஎம்சி மட்டுமே உள்ளது. துங்கபத்ரா அணையில் கடந்த ஆண்டு இதே நாளில் 44.35 டிஎம்சி நீர் இருப்பு இருந்த நிலையில் இந்த ஆண்டு 4.27 டிஎம்சி நீர் மட்டுமே உள்ளது. ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளிலும் கடந்த ஆண்டை விட சுமார் 70 சதவீதம் குறைவான அளவிலே நீர் இருப்பு உள்ளது.

இதே நிலை அடுத்த இரு வாரங்களுக்கு நீடித்தால் மைசூரு, பெங்களூரு, சாம்ராஜ்நகர், மண்டியா, பெல்லாரி, விஜயபுரா உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கு குடிநீர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதேபோல காவிரியில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை திறப்பதிலும் சிக்கல் ஏற்படும் அபாயம் உள்ளது.

இந்நிலையில் கர்நாடக கிராம பஞ்சாயத்து ராஜ்ஜியம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பிரியங்க் கார்கே குடிநீர் பிரச்சினையை சமாளிப்பது தொடர்பாக நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது குடிநீர் தட்டுப்பாடு நிலவும் 16 மாவட்டங்களுக்கு 1500 டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிப்பது, 500 ஆழ்துளை கிணறுகள் நீர் வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே டாஸ்மாக் கடைக்கு பூட்டுப் போடும் போராட்டம்



தஞ்சாவூர், ஜூன். 29-
தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள டாஸ்மாக் கடையை மூட வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் முற்றுகையிட்டுப் பூட்டுப் போடும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகேயுள்ள மாட்டு மேஸ்திரி சந்தின் முகப்பு பகுதியில் டாஸ்மாக் கடை உள்ளது. இக்கடையினால், இந்த வழியாக செல்லும் பொதுமக்கள், பெண்கள், மாணவர்கள், வணிகர்கள் ஆகியோருக்கு மிகவும் இடையூறாக இருப்பது மட்டுமல்லாமல், பல்வேறு குடிமகன்களின் தொல்லைக்கு ஆளாகின்றனர். எனவே இக்கடையை மூடக் கோரி பல்வேறு தரப்பினரும் பல முறை உயர் அலுவலர்களிடம் மனுக்கள் அளித்து போராட்டங்கள் நடத்தியும் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்தனர்.

இந்நிலையில், தமிழக அரசு கடந்த வாரம் மூடிய 500 மதுக்கடைகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 கடைகள் மூடப்பட்டன. அப்போது இக்கடையும் மூடப்படும் என எதிர்பார்த்த நிலையில், இந்தக் கடை தொடர்ந்து செயல்படுவதால் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் அதிருப்தியடைந்தனர். எனவே, இந்தக் கடையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி பூட்டுப் போடும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக் குழு உறுப்பினர் இ.வசந்தி தலைமை வகித்தார். மாநகரச் செயலாளர் எம்.வடிவேலன், மாநகரக் குழு உறுப்பினர் சி.ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்டச் செயலாளர் சின்னை. பாண்டியன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் ந.குருசாமி, தமிழ்நாடு விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் மற்றும் அப்பகுதியிலுள்ள ஏராளமான வணிகர்கள் பங்கேற்று, அரசு விரைவு போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வந்து, இந்தக் கடையை பூட்டுப் போட முயன்றனர். போலீஸார் தடுத்ததால், கடைக்கு முன் தரையில் அமர்ந்து தமிழக அரசை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு கண்டன முழக்கமிட்டனர். இதனால் டாஸ்மாக் கடை சுமார் 1 மணி நேரம் மூடப்பட்டது.

பின்னர், அந்த இடத்திற்கு வந்த டாஸ்மாக் துணை மேலாளர் செல்வபாண்டியன், டிஎஸ்பி பி.என். ராஜா, காவல் ஆய்வாளர்கள் வி. சந்திரா, எஸ். கருணாகரன் ஆகியோரிடம், 20 நாட்களுக்கு கடையை நிரந்தரமாக மூடாவிட்டால் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தனர். இந்தக் கடையை மூடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் உறுதியளித்ததால் போராட்டம் கைவிடப்பட்டன. இதனால் அப்பகுதியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட கடைகள் மதியம் 1 மணி வரை கடைகளை அடைத்திருந்தனர்.

அப்போது, போராட்டத்தில் ஈடுபட்ட செந்தில்குமாரிடம், ஆய்வாளர் சந்திரா, வீட்டின் வாசலில் குடிப்பவர்களை கண்டிக்க வேண்டும், அதனை விட்டு கடையை மூடச் சொல்லலாமா எனக் கேட்டதால், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# பஞ்செட்டி அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, ஜூன்29–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், பஞ்செட்டி கிராமத்தில் சுமார் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் மகா கும்பாபிஷேகம் செய்தனர்.

இந்நிலையில், சிதிலமடைந்து காணப்பட்ட இக்கோவிலை கிராம மக்கள் மற்றும் விழா குழுவினர் இடித்துவிட்டு புதிய பொலிவுடன் இக்கோவிலை கட்டி முடித்தனர். இக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் நேற்று காலை 7 மணிக்கு நடைபெற்றது. இதை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை காலை கணபதி ஹோமம்,நவகிரக ஹோமம்,கோ பூஜை,தன பூஜை,யாகசாலை நிர்மானம்,வாஸ்து சாந்தி, பிரவேச பலி,அங்குரார்பணம், முதல்காலயாகசாலைபூஜைகள் உள்ளிட்டவை நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை இரண்டாம் கால மற்றும் மூன்றாம் கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றது. நேற்று விடியற் காலை நான்காம் காலையாக சாலை பூஜைகள் நடைபெற்றது.இதன் பின்னர்,மகா பூர்ணாகுதி, யாத்ரா தானம் உள்ளிட்டவை நடைபெற்றது.

பின்னர்,புனித நீர் அடங்கிய கலசங்களை வேத விற்பனர்கள் ஊர்வலமாக கொண்டு வந்தனர்.நேற்று காலை ஏழு மணிக்கு விமான கோபுரங்கள்,மூலவர்,பரிவார மூர்த்திகளுக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்தனர்.முன்னதாக முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரவிச்சந்திரன் குடும்பத்தினர் சார்பில் ரூ.4 லட்சம் மதிப்பில் நாலரை கிலோ வெள்ளியால் செய்யப்பட்ட அம்மனின் கவசம் மேல தாளம் முழங்க ஊர்வலமாக கொண்டு வந்து கோவிலில் காணிக்கையாக செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், மூலவருக்கு மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

பின்னர்,பக்தர்களுக்கு தீர்த்தம்,பிரசாதம் வழங்கப்பட்டது.கோவில் வளாகத்தில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்,ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நிர்மலாரவி,மாவட்ட கவுன்சிலர் தேவிதயாளன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் கோபிநாத் உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள்,விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.இன்று முதல் 48 நாட்கள் மண்டலாபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

# சப்ஜூனியர் மற்றும் ஜூனியர்களுக்கான சென்னை மாவட்ட வூசு போட்டி மற்றும் கோச்சிங் செமினார்



சென்னை, ஜூன்29–

சப்ஜூனியர் மற்றும் ஜூனியர்களை சென்னை மாவட்ட வூசு போட்டி மற்றும் கோச்சிங் செமினார் சென்னை வண்ணாரப்பேட்டை சிங்காரத் தோட்டத்தில் அமைந்துள்ள போலீஸ் கம்யூனிட்டி அரங்கத்தில் நடைபெற்றது சென்னை மாவட்ட வூசு கௌரவ தலைவர் மனோகர பூபதி,சென்னை மாவட்ட வூசு தலைவர் புல்கானி,சென்னை மாவட்ட வூசு சட்ட ஆலோசகர் தாஸ் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை மாவட்ட வூசு செயலாளர் விசாகபதி மற்றும் சென்னை மாவட்ட வூசு துணை தலைவர் ஆலய குமார், சென்னை மாவட்ட வூசு பொருளாளர் ஜெயச்சந்திரன் இவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தலைமை செய்தி ஆசிரியர் புதுகை வரலாறு நாளிதழ் சென்னை பதிப்பு சு.காதர் உசேன், முத்துப்பழனியப்பன் மேனேஜிங்டைரக்டர்ஹீண்டாய் சாய்ராம் ஜெனரல் மேனேஜர் ஹீண்டாய் பத்திரிக்கையாளர் ஜேட்ஸ்ஷன் அதிபோர் பங்கு கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.மேலும் திண்டிவனத்தில்நடக்கவிருக்கும் மாநில அளவிலான போட்டிக்கு சென்று வெற்றி பெற்று வர வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

# சூனாம்பேட்டில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி கோயில் கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடந்தது



செங்கல்பட்டு ஜூன்29–

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம் சூனாம்பேடு ஊராட்சியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் சில நாட்களுக்கு முன் மறுபுனரமைக்கப்பட்டு இரண்டுநிலை கோபுரம் மற்றும் சாலகிரக வளைவு விமானம் அமைக்கப்பட்ட நிலையில் கோயிலின்மகா கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடந்தது.

விழாவை முன்னிட்டு கடந்த 25ஆம் தேதி முதல் அனுக்ஞை, பிரவேச பலி, கணபதி ஹோமம், கோ பூஜை, விநாயகர் பூஜை, கால பூஜைகள் உள்ளிட்டவைகள் நடத்தப்பட்டு அம்மனுக்கு பல்வேறு வழிபாடுகள் நடத்தப்பட்டன. இந்நிலையில் மங்கள இசையுடன் யாகம் நிறைவு பெற்று திருக்குடங்கள் புறப்பட்டு கோயிலை சுற்றி வரப்பட்டது.

இதனை தொடர்ந்து மேளதாளங்கள் முழங்க விமான கோபுரத்தில் திருநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடந்தது. பின்னர் மூலஸ்தான மூர்த்திகளுக்கு அபிஷேகங்கள் செய்யப்பட்டதை தொடர்ந்து அம்மனுக்கு பல்வேறு அபிஷேகங்கள் செய்து சிறப்பு அலங்காரத்துடன் அம்மனுக்கு தீபாராதனைகாட்டப்பட்டது இதில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டு சென்றனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டன. இன்று இரவு அம்மன் சிறப்பு அலங்காரத்துடன் பக்தர்களிடையே எழுந்தருளி திருவீதியுலா நடக்கவுள்ளது.

# 4.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்கிங்காம் கால்வாயை தூர்வாரி அகலப்படுத்தும் பணிக்கான பூமி பூஜை



சென்னை, ஜூன்29–

சென்னை கொருக்குப்பேட்டை அம்பேத்கர் நகர் பகுதியில் மழைக்காலங்களில் அடிக்கடி மழை நீர் தேங்குவதால் அப்பகுதியில் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர்.

மழை நீர் தேங்காமல் இருக்க பக்கிங்காம் கால்வாயை அகலப்படுத்த கோரி அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். பொதுமக்கள் கோரிக்கை ஏற்று மழைக்காலங்களில் மழை நீர் தேங்காமல் நிறக மழைக்காலங்களில் வெள்ள பாதிப்புகளில் இருந்து அப்பகுதி முற்றிலும் பாதுகாக்கும் வகையில் சென்னை மாநகராட்சி சார்பில் 4.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்கிங்காம் கால்வாய் தூர்வாரி அகலப்படுத்தும் பணிக்கான பூமி பூஜையை ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து கொருக்குப்பேட்டை ஜெ ஜெ நகர் பகுதியில் ஒரு கோடி 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியை பூஜை போட்டு ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர், மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் தொடங்கி வைத்தனர்.

அதை தொடர்ந்து தண்டையார்பேட்டை காலரா மருத்துவமனை அருகே ஆதிதிராவிடர் காலனி மற்றும் காலரா மருத்துவமனை பகுதியில் 1 கோடி மதிப்பீட்டில் மழை நீர் கால்வாய் அமைக்கும் பணியை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் மணிமேகலை, பவித்ரா, மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை, கொளத்தூர் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா




சென்னை , ஜூன்29–

சென்னை, கொளத்தூர் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மியம்மன் ஆலய புனராவர்த்தாரண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா சோபகிருது வருடம், ஆனி மாதம் 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, சப்தமி திதி, உத்திர நட்சத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய திருப்பணி நிர்வாகிகளும் திருப்பணி குழுவினரும் சிறப்பாக செய்திருந்தனர்.



காரைக்காலில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது இந்நிலையில் அலுவலக பாதுகாப்பு மற்றும் அலுவலக வளாகத்தில் குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் விதமாக போக்குவரத்து அலுவலக உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் 10 கண்காணிப்பு கேமராக்கள் காரைக்கால் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் சி எஸ் ஆர் நிதியின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் பொருத்தப்பட்டது இதனை நேற்று புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா திறந்து வைத்தார் இதில் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணீஷ் வட்டார போக்குவரத்து அலுவலர் அங்காளன் ஐயர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் உலக புகழ் பெற்ற காரைக்கால் அம்மையார் ஆலய மாங்கனி திருவிழா வரும் ஜூலை 02ம் தேதி நடைபெற உள்ளது. அச்சமயம் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் விதமாக டன் கணக்கில் மாம்பழம் இறைக்கப்படும். அதற்காக பல்வேறு வகைகளை சேர்ந்த ஏராளமான மாம்பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனைக்கு தாயார் நிலையில் உள்ளது. இது போல் தயார் நிலையில் உள்ள மாம்பழங்கள் கார்பைடு கற்கள் மற்றும் ரசாயனம் தெளித்து பழுக்க வைத்தப்படுகின்றதா என உணவு பாதுகாப்பு அதிகாரி ரவிச்சந்திரன் மற்றும் ஊழியர்கள் கொண்ட குழுவினர் நேற்று பல்வேறு பழக்கடைகளில் அதிரடி சோதனையில் ஈடுபட்டு பழங்களின் தரம் குறித்து தீவிர ஆய்வில் ஈடுபட்டனர். பழங்களை வெட்டிப் பார்த்தும் தண்ணீரில் போட்டும் ஆய்வு செய்தனர்.

## வழுவூரில் மக்கள் தொடர்பு முகாமில்

# 121 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய மாவட்ட ஆட்சியர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்




மயிலாடுதுறை, ஜூன்29–

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், வழுவூர் கிராமம். எலந்தங்குடி வி.எஸ்.பி. திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் 121 பயனாளிகளுக்கு ரூ.17.54 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் கலந்துகொண்டு வழங்கினர்.

மக்கள்தொடர்புமுகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடுமுதலமைச்சர் ஆணைக்கிணங்க, பொதுமக்களின் இருப்பிடத்திற்கே சென்று அவர்களின் கோரிக்கைகள், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அனைத்துத் துறை அலுவலர்கள் மூலம் மனுவாக பெறப்பட்டன. பொது மக்களின் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மக்கள் தொடர்பு முகாமில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், சுகாதாரம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சி துறை ஆகிய துறையின் மூலம் அரசின் திட்டங்கள் பொதுமக்களின் பார்வைக்காக அரங்குகள் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்குகளில் துறை சார்ந்த அலுவலர்கள் தங்களுடைய திட்டங்கள் தொடர்பாக விளக்கமாக எடுத்துரைத்தனர்.

நமது மாவட்டத்தில் நீர்வள ஆதார துறையின் மூலம் 8.06 கோடி செலவில் 750 கி.மீ.தூரம் சிறப்பாக தூர்வாரப்பட்டன. ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் 1138 கி.மீ. தூரம் தூர்வாரப்பட்டன. இதன்மூலம், கடைமடை வரை தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளார்கள். இதன்மூலம், நமது மாவட்டத்தில் 55,000 ஏக்கர் பாசன வசதி பெறும். குறுவை சாகுபடிக்கு தேவையான யூரியா, பொட்டாஸ். காம்ப்ளக்ஸ் போதிய இருப்பு உள்ளன. பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ், நமது மாவட்டத்தில் 8000 வீடுகள் கட்டப்படாமல் உள்ளன. இப்பணிகளை துரிதப்படுத்த நாங்களே சென்று வீடு கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம். கடந்த ஒரு மாதத்தில் 1000 வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 29,000 குடிநீர் இணைப்புகள் தர உள்ளன. அதனை செயல்படுத்த முனைப்பு காட்ட வேண்டும். சுகாதார துறை சிறப்பாக செயல்படுகிறது. மக்களை தேடி மருத்துவம் திட்டம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். நமது மாவட்டத்தில் 12,000 சுய உதவி குழுக்கள் உள்ளன. கடந்த ஆண்டு 500 கோடி மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடனுதவி வழங்கினோம். இந்த ஆண்டு 600 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சிறப்பாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மக்கள்தொடர்புமுகாமில், 12 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.1,14,000, 8 பயனாளிகளுக்கு ரூ.1,80,000 இறப்பு நிவாரணமும், 13 பயனாளிகளுக்கு ரூ.13,000 முதியோர் மற்றும் இதர உதவிதொகை பெறுவதற்கான ஆணையும், 73 பயனாளிகளுக்கு ரூ.14,26,000 மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாவும், 10 பயனாளிகளுக்கு ரூ.11,200 மதிப்பில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் இடுபொருளும், என மொத்தம் 121 பயனாளிகளுக்கு ரூ.17.53,280 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது என. மாவட்ட ஆட்சியர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, ஊரக வளர்ச்சி துறை இணை இயக்குனர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், வேளாண்மை துறை இணை இயக்குனர் ஜே.சேகர், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் ஐ.கண்மணி, குத்தாலம் வட்டாட்சியர் இந்துமதி, ஒன்றிய குழு உறுப்பினர் ராகவ மூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் லெட்சுமி, மோகன், மற்றும் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# இளம் பெண்ணின் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து வலைதளத்தில் பரப்பிய இளைஞர் கைது



காரைக்கால்,ஜூன்,29

காரைக்கால் மாவட்டம் பச்சூரை சேர்ந்த 21 வயது இளம்பெண் அவர் சென்னையில் படித்து வருகிறார். அவருக்கு சில மாதங்களாக முகம் தெரியாத நபர் ஒருவர் தன்னை சரவணன் என்று ஃபோனில் அறிமுகம் செய்து கொள்கிறார் நீங்கள் யார் என்று தெரியவில்லை என இந்தப் பெண் தவிர்த்து விட, அவர் சில நாட்கள் கழித்து மீண்டும் தொடர்பு கொள்கிறார்.

அந்தப் பெண் தொடர்பை துண்டிக்க அந்தப் பெண்ணையும் அவரது அப்பாவையும் போனிலும் கிளப் ஹவுஸ் ஆப் மூலமாகவும் அசிங்கமாகவும் ஆபாசமாகவும் திட்டி உள்ளார். கிளப் ஹவுஸ் என்ற ஆப்பில் இந்த பெண்ணின் பெயரில் ஒரு கணக்கை தொடங்கி அவரது அப்பாவையும் அந்தப் பெண்ணையும் அசிங்கமாக திட்டியும் புகைப்படங்களை அசிங்கமாக சித்தரித்தும் வலைதளத்தில் பரப்பியுள்ளார் இது சம்பந்தமாக அந்த பெண் காரைக்கால் நகர காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்த போலீசார் சைபர் கிரைம் போலீசாரின் ஒத்துழைப்புடன் அந்த நபர் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியில் பதுங்கி இருப்பதாக கண்டுபிடித்தனர்.

இதனை அடுத்து அங்கு விரைந்த காரைக்கால் போலீசார் இளம்பெண்ணை ஆபாசமாக சித்தரித்து வலைதளங்களில் பரப்பியவர் சங்கரன்கோயில் பகுதியை சேர்த்த சரவணன் @ சரண் @ ரெமோ என்பவரை கைது செய்து காரைக்கால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். வழக்கு பதிவு செய்து இரண்டு நாட்களில் சைபர் கிரைம் வழக்கில் குற்றவாளியை கைது செய்த போலீசாரை முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணீஷ் வெகுவாக பாராட்டினார்.

# மதுரைவாசல் கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில் வசித்து வந்த ஏழு வீடுகளுக்கு சீல் வைத்ததால் பரபரப்பு




ஊத்துக்கோட்டை, ஜூன்29–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,மதுரைவாசல் கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோவில் உள்ளது. இந்நிலையில், இக்கோவிலுக்கு சொந்தமான 35 சென்ட் நிலத்தில் ஒன்பது பேர் சுமார் 30 ஆண்டுகளாக வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வந்தனர். இந்நிலையில், ஆக்கிரமிப்பு செய்துகட்டி உள்ள வீடுகளை அகற்றுமாறு இந்து சமய அறநிலையத்துறை வேலூர் இணை ஆணையர் 2017–ம் ஆண்டு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றார்.

இந்நிலையில், இப்பகுதியில் வசித்து வந்த இருவர் நீதிமன்றத்தை நாடியதாக கூறப்படுகிறது. ஆறு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள உத்தரவுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு திருவள்ளூர் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் சித்ராதேவிக்கு இணை ஆணையர் உத்தரவிட்டாராம். இந்நிலையில்,நேற்று பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்புடன் வருவாய் அலுவலர் பெருமாள் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ஏழு வீடுகளுக்கும் பூட்டி சீல் வைத்தார்.

இதனால் அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக கிராம மக்கள் சிலர் அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இருப்பினும், எதிர்ப்பையும் மீறி ஏழு வீடுகளுக்கும் சீல் வைக்கப்பட்டது. இதன் பின்னர்,புறப்பட்ட அதிகாரிகளின் வாகனங்களை போராட்டத்தில் ஈடுபட்ட சிலர் தாக்கினர்.அவர்களை போலீசார் அப்புறப்படுத்த முயன்றனர்.இதனால் அதிகாரிகளுக்கும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆக்கிரமடைந்த கிராம மக்கள் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அரசியல் குழுவின் தலைமை நிலைய செயலாளர் நீலவானத்துநிலவன் தலைமையில் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதனால் போலீசார் ஐந்து பெண்கள் உள்பட 12 பேரை கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றினர்.இதன் பின்னர்,அதிகாரிகளின் வாகனங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விடுவித்தனர். இப்பிரச்சினையால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அப்பகுதியில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# ஆதனக்கோட்டை அருகே வரசித்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் கோலாகலம்



ஆதனக்கோட்டை, ஜூன்.29-

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள கணபதிபுரம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ மகாகாளியம்மன் ஸ்ரீ பாலமுருகன் ஆலய அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. புண்ணிய நதிகளில் இருந்து எடுத்துவரப்பட்ட புனிதநீரை யாகசாலை பூஜையில் வைத்து விக்னேஸ்வரபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லஷ்மி ஹோமம் பூர்ணாஹூதியும் தீபாராதனை காட்டப்பட்டு கடம் புறப்பட்டு ஆலயத்தை வலம்வந்து யாக சாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீரை முதலாவதாக விநாயகருக்கும் அடுத்ததாக வரசித்தி விநாயகருக்கும் பாலமுருகனுக்கும் மகாகாளியம்மன் ஆகிய ஆலயங்களில் உள்ள கோபுர கலசத்தில் ஊற்றி சிவாச்சாரியர்கள் கும்பாபிஷேகம் செய்தனர்.

இந்த கும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர், பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்த கும்பாபிஷேக விழாவில் யானை மற்றும் குதிரைகள் அழகிய உடைய அணிந்து அணிவகுத்து நின்றது பக்தர்களை மனமகிழ்ச்சியில் ஆழ்த்தியது, இரவு நடன கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.








புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா நர்சரி & பிரைமரி பள்ளியில் இந்த ஆண்டு பள்ளியில் சேர்ந்த குழந்தைகளுக்கு மிதிவண்டி வழங்கும் விழா பள்ளியின் தாளாளர் வெங்கடேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புதுகை வரலாறு நிறுவனர் & ஆசிரியர் சு.சிவசக்திவேல் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்தினார். விழாவில் பள்ளியின் முதல்வர் தீபா உள்ளிட்ட ஆசிரிய பெருமக்கள்,பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஆதனக்கோட்டையில் ஒரு லட்ச ரூபாய் மதிப்பிலான ஆடுகள் திருட்டு: மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு

ஆதனக்கோட்டை, ஜூன்.29-

புதுக்கோட்டை மாவட்டம் பழைய ஆதனக்கோட்டை முத்துராஜா தெரு மேல காட்டில் வசிக்கும் முத்துக்கிருஷ்ணன் மனைவி வாசுகி (45). இவரது கணவர் முத்துகிருஷ்ணன் மரம் வெட்டும் கூலித்தொழிலாளியாக வேலை செய்து வருகின்றார். சொர்ப்ப வருமானத்தை கொண்டு குடும்பம் நடத்தி வரும் இவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். ஏழ்மையின் காரணமாக குடிசை வீட்டில் வசிக்கும் இவர்கள் 30 க்கும் மேற்பட்ட வெள்ளாடுகள் வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

வெள்ளாடுகள் திருடுபோனது தொடர்பாக வாசுகி கூறியதாவது, நான் வழக்கம்போல் எனது 30 க்கும் மேற்பட்ட வெள்ளாடுகளை மேய்த்து விட்டு எனது வீட்டருகே உள்ள கிடையில் கட்டி விட்டு கணவர் பிள்ளைகளுடன் உறங்கச் சென்றோம். விடிந்து பார்த்தபோது கிடையில் இருந்த 27 ஆடுகளும் காணாமல் போயிருந்தது. அக்கம் பக்கம் தேடியும் விசாரித்தும் கிடைக்காததால் கிடையில் தனது ஆடு கட்டியிருந்த கயிறுகள் அறுக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

தனது மூத்த மகள் ராசாத்திக்கு திருமணம் செய்ய முடிவெடுத்து ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் விலை போகக்கூடிய தனது ஆடுகளை விற்று மூத்த மகளை திருமணம் செய்து கொடுக்கலாம் என நினைத்து மாப்பிள்ளை பார்க்க தொடங்கினோம். இந்த நேரத்தில் மூத்த மகளுக்கு கல்யாணம் செய்து கொடுப்பதற்காக வைத்திருந்த ஆடுகள் திருடு போனது மகளை எப்படி திருமணம் செய்து கொடுக்கப் போகிறோம் என்ற கவலையில் எங்களை ஆழ்த்தியுள்ளது என்றார் வாசுகி .

இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் அருணகிரியிடம் கேட்டபோது, ஆடுகளை மர்மநபர்கள் திருடியது தொடர்பாக வாசுகி ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரை பெற்றுக் கொண்ட ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் அருணகிரி சம்பவ இடத்தை பார்வையிட்டு கூறியதாவது: ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள 27 ஆடுகளை திருடிய மர்ம நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தனிப்படை அமைத்து வலைவீசி தேடி வருவகின்றோம் விரைவில் குற்றவாளிகளை கைது செய்வோம் என கூறினார். ஏழை பெண்மணி யினுடைய திருமணம் நடைபெற விரைவில் ஆடு திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்யுமா காவல்துறை, சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# "சிதம்பரம் நடராஜர் கோயில் விவகாரத்தில் யார் பெரியவர் என்ற பிரச்சினையே இல்லை" அமைச்சர் சேகர்பாபு

**சென்னை , ஜூன். 29-**

**பக்தர்கள் வழிபடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதுதான் எங்களுடைய நோக்கம் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.**

காஞ்சிபுரத்தில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலை தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள ராஜகோபுரம், ஆயிரங்கால் மண்டபம், ரிஷி கோபுர மண்டபம், மாவடி சன்னதி, நடராஜர் சன்னதி, சிவகங்கை தீர்த்தக் குளம், திருமதில் பலப்படுத்தும் பணிகள் உள்ளிட்ட 29 திருப்பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கிவைத்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "1,000 ஆண்டுகளுக்கு மேலான நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட திருக்கோயில்களை பொக்கிஷங்களாக பாதுகாத்திடும் வகையில் புனரமைத்தல், ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்களை பாதுகாத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், நந்தவனங்களை பாதுகாத்தல், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, தங்கும்அறை,முடிகாணிக்கை மண்டபம், விருந்து மண்டபம் போன்றவற்றை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டு வருகிறது.

காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் திருப்பணிகள் 2024-ஆம் ஆண்டு இறுதிக்குள் பணிகள் நிறைவு பெற வேண்டும் என்று துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டிருக்கின்றோம். கடைசியாக இத்திருக்கோயிலுக்கு 2006 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது. சுமார் 17 ஆண்டுகள் கடந்து விட்டதால் திருப்பணிகளை வேகப்படுத்தி குடமுழுக்கு நடத்தப்படும்" என்று அவர் கூறினார்.

சிதம்பரம் நடராஜர் கோயில் தொடர்பான கேள்விக்கு, "சிதம்பரம் நடராஜர் கோயிலை பொறுத்தளவில் சட்டப்படி பக்தர்களின் சுதந்திரமான இறைவழிபாட்டிற்கு அனைத்து உதவிகளையும் இந்து சமய அறநிலைத்துறையும், தமிழக அரசும் செய்யும். இதில் யார் பெரியவர் என்ற பிரச்சினையே இல்லை. இறையன்பர்கள் தெய்வத்தை வழிபடுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதுதான் எங்களுடைய நோக்கமாகும்" என்றார்.



புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக முன்னாள் தலைவர் சிவக்குமார் 2022-23 ஆம் ஆண்டின் ரோட்டரி மாவட்ட 3000தின் ஆளுநர் ஜெரால்டு-விடம் ரோட்டரி அறக்கட்டளைக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சி தனியார் ஹோட்டலில் நடைபெற்றது, உடன் மண்டல செயலாளர் ஆரோக்கியசாமி, புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் அசோகன், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் கண.மோகன்ராஜா, செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், வருங்கால தலைவர் தங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை ஜூலை 12 வரை நீட்டித்து நீதிமன்றம் உத்தரவு

**சென்னை , ஜூன். 29-**

**அமலாக்கத் துறையினரால் கைது செய்யப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை ஜூலை மாதம் 12-ம் தேதி வரை நீட்டித்து சென்னை அமர்வு முதன்மை நீதிபதி உத்தரவிட்டார்.**



நேற்றுடன் செந்தில் பாலாஜியின் 14 நாள் நீதிமன்ற காவல் முடிந்தது. இதனைத் தொடர்ந்து, சென்னை அமர்வு முதன்மை நீதிபதி எஸ்.அல்லி முன்னிலையில் காணொலி வழியாக செந்தில் பாலாஜி ஆஜரானார். ஆஜரான செந்தில் பாலாஜியிடம் நீதிபதி அல்லி நலம் விசாரித்தார். உடல் நலம் குறித்த விசாரித்த நீதிபதியிடம் அறுவை சிகிச்சையினால் சற்று வலி உள்ளது என்று செந்தில் பாலாஜி பதில் கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜூலை 12-ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி எஸ். அல்லி உத்தரவிட்டார்.

முன்னதாக, சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அவரது அரசு இல்லத்தில் அமலாக்கத் துறையினர் கடந்த 14-ம் தேதி அதிகாலை கைது செய்தனர். அப்போது நுங்கம்பாக்கத்தில் உள்ள அலுவலகத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லும்போது, அவர் நெஞ்சு வலிப்பதாகக் கூறியதால், அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆஞ்சியோகிராம் பரிசோதனையில், இதயத்துக்குச் செல்லும் முக்கிய ரத்தக் குழாய்களில் அடைப்பு இருப்பது தெரியவந்ததால், அவருக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். சென்னை கே.கே.நகர் இஎஸ்ஐ மருத்துவர்களும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

செந்தில் பாலாஜியின் மனைவி கேட்டுக் கொண்டதால், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த 15-ம் தேதி ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். மருத்துவர்கள் ஏற்கெனவே முடிவு செய்தபடி, அவருக்கு கடந்த 21-ம் தேதி பைபாஸ் அறுவை சிகிச்சை நடைபெற்றது.

அறுவை சிகிச்சைக்குப் பின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த 24-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜி தனி அறைக்கு மாற்றப்பட்டார். இதனிடையே, அமைச்சர் செந்தில் பாலாஜி இன்னும் 2 வாரங்களுக்கு மருத்துவக் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்று தகவல் வெளியானது.

# விவசாயிகள் நலன் காக்கும் வியன்மிகு தமிழக அரசு

தென்காசி, ஜூன். 29-

குறையாத உற்பத்தியை தரும் உழைப்பாளர்களும் அறவுணர்வு உடையவர்களும் சுயநலம் இல்லாத செல்வரும் சேர்ந்து வாழ்வதே நாடு என்னும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களையும் ஊக்குவிக்கும் வகையிலும் தமிழகத்தின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்திலும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

தென்காசி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி துறையின் மூலம் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் மாநில திட்டத்தில் மல்பெரி நடவு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 10,500 வீதம் 150 ஏக்கர் 83 விவசாயிகளுக்கு 15. 75 லட்சம் நவீன பட்டுப்புழு வளர்ப்பு மனை மானியமாக மனை ஒன்றுக்கு ரூபாய் ஒரு லட்சத்து 20 ஆயிரம் 8 விவசாயிகளுக்கு ரூபாய் 9.60 லட்சம் முழு வளர்ப்பு தளவாடங்கள் ஒன்றுக்கு ரூபாய் 52,500 வீதம் 39 பயனாளிகளுக்கு ரூபாய் 20.47 லட்சம் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள முன்னோடி விவசாயிகளுக்கு ரூபாய் 35 ஆயிரம் வீதம் 4 முன்னோடி விவசாயிகளுக்கு ரூபாய் 1.40 லட்சம் மதிப்பில் பவர் டில்லர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2021-22 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் 3 சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முதல் பரிசு ரூபாய் 25000, இரண்டாவது பரிசு 20,000 மற்றும் மூன்றாம் பரிசு 15,000 வழங்கப் பட்டுள்ளது.

அரசின்திட்டங்கள்மூலம் பயனடைந்த விவசாயிகள் தெரிவித்ததாவது,

**காதர் மைதீன் (வடகரை)**

எனது பெயர் காதர் மைதீன் நான் பிஎஸ்சி கணினி அறிவியல் பட்டம் பெற்றுள்ளேன். வடகரை கிராமத்தில் வசித்து வருகிறேன் எனது படிப்பை முடித்ததும் அரபு நாட்டில் பணிபுரிந்து வந்தேன் விவசாயத்தின் மீது ஆர்வம் கொண்டதால் சொந்த ஊரிலிருந்து விவசாயம் செய்து முன்னேறவும் குடும்பத்தினரை அருகில் இருந்து கவனிக்கவும் பட்டு வளர்ப்பு தொழிலை தேர்வு செய்தேன். மேலும் எனது தோட்டத்தில் 2.50 ஏக்கர் பரப்பில் மல்பெரி நடவு செய்து 1426 சதுர அடி பரப்பில் தனி புழு வளர்ப்பு மனை அமைத்து நவீன புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி ஒன்பது புழு வளர்ப்பு 1025 பட்டு முட்டை தொகுதிகள் புழு வளர்ப்பு மேற்கொண்டு 616.500 கிகி பட்டுக் கூடுகள் அறுவடை செய்து ரூபாய் 3, 50,166 வருமானம் பெற்று பட்டு வளர்ப்பு தொழிலில் வெற்றி வாகை சூடியுள்ளேன்.



**சமுத்திரம் (சுந்தரபாண்டியபுரம்)**

எனது பெயர் சமுத்திரம் எனக்கு ( 68) எனது கணவன் இறந்து விட்டார், தென்காசி வட்டம் சுந்தரபாண்டியபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன் விவசாய கூலி தொழிலாளியாக பணி செய்து வந்தேன். தற்போது இரண்டு ஏக்கர் எம்ஆர்2 மல்பெரி ரகம் நடவு செய்து 1600 சதுர அடியில் தனி புழு வளர்ப்பு மனை அமைத்து பட்டு வளர்ப்பு தொழில் செய்து எனது கிராமத்தில் 2 குடும்பங்களுக்கு வேலை கொடுத்துள்ளேன். மேலும் பட்டுப்புழு வளர்ப்பு தொழில் நுட்பங்களை அருகில் உள்ள விவசாயிகளுக்கும் எடுத்துரைத்து வருகிறேன். நான் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரை மொத்தம் 12 புழு வளர்ப்புகள் 2575 முட்டை தொகுதிகள் வளர்த்து 2438.600 கி கி பட்டுக்கூடுகள் அறுவடை செய்து ஆண்டு வருமானம் ரூபாய் 15,83,829 பெற்று மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்க பரிசு வழங்குதல் திட்டத்தின் கீழ் மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிக்கான இரண்டாம் பரிசு 75 ஆயிரத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் 9-3-2023 அன்று பெற்றேன் மேலும் மாவட்ட அளவில் முதல் பரிசு ரூபாய் 25 ஆயிரத்தினை வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர் ராமச்சந்திரனிடம் பெற்றுள்ளேன் தொடர்ந்து இம்மாவட்டம் பட்டு வளர்ச்சித் துறையில் சவால்களை சாதனையாக்கி வெற்றியுடன் திகழ்கிறது.

**தொகுப்பு**
**இரா. இளவரசி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**ரா.ராமசுப்பிரமணியன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**


PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பெரும்பான்மை அரசால் பொது சிவில் சட்டத்தை மக்கள் மீது திணிக்க முடியாது

# செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் அடுத்த மாதம் வரை நீட்டிப்பு





# கர்நாடக அணைகளில் நீர்மட்டம் குறைவு தமிழகத்திற்கான காவிரி நீரில் சிக்கல்


| சென்னை / புதுக்கோட்டை | 29.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பிரசந்தா சந்திரா மகாலனோபிசு , இந்தியப் பொருளியலாளர் (பி.1893) (இ.1972)



ஆர். எஸ். மனோகர் , தமிழக நாடக, திரைப்பட நடிகர் (பி.1925) (இ.2006)



பி. கே. அய்யங்கார் , இந்திய அணுசக்தி அறிவியலாளர் (பி.1931) (இ.2011)



அனுராதா ரமணன் , தமிழக எழுத்தாளர் (பி.1947) (இ.2010)



## இன்றைய நினைவு நாள்

மைக்கேல் மதுசூதன் தத்தா , இந்தியக் கவிஞர் (பி.1824) (இ.1873)



தாமோதர் தர்மானந்தா கோசாம்பி, இந்திய மார்க்சியப் புலமையாளர், கணிதவியலாளர் (பி.1907) (இ.1966)



வ. ஐ. சுப்பிரமணியம் , தமிழக மொழியியலாளர் (பி.1926) (இ.2009)

